[14th March 1963

திரு. முனு. ஆதி : ரேடியோ போடாமல் வருகிற பஸ்ஸுக்கு எதிரே ரேடியோ போட்டுக்கொண்டு கார் வருவதன் காரணமாக இந்த மாதிரி ஆக்ஸிடெண்டுகள் ஏற்படலாம் என்ற காரணத்தினால் இத்தகைய ஒரு நிலையைத் தடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அப்படி வானொலி போட்ட மோட்டார் கார்களில், காரில் இருக்கிறவர்கள் அனுபவிக்கலாமே தவிர, அதிக சப்தம் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

திரு. ம. கமலநாதன் : பஸ்களில் ரேடியோ போடக்கூடாது என்று ஏற்படுத்துவதற்குமுன் ரேடியோ வைத்ததால் ஆக்சிடெண்ட் உண்டாயிற்று என்பதற்கு ஏதாவது அரசாங்கத்திடம் தகவல் உண்டா ? அப்படியானால் அதன் காரணமாக எவ்வளவு ஆக்ஸிடெண்டுகள் ஏற்பட்டன.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றுமில்லை. அவ்வாறு ஏற்படும் என்று எதிர்பார்க்கலாம், விபத்து ஏற்பட இடம் ஏற்படலாம் என்று யோசனை செய்து வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் சில நாட்களுக்குமுன் கனம் அங்கத்தினர் அவர்கள் இசையிலே பயிரே விளைகிறது என்று சொன்னார்கள். ஆகையால் இதைப் பற்றி ரொம்பவும் பேசவேண்டியதில்லை.

திரு. சா. கணேசன் : சில தனிப்பட்ட நபர்கள் இரவுப் பிரயாணம் செய்யும்போது, ரேடியோ இல்லாவிட்டால் தூக்கம் வந்துவிடுகிறது என்று சொல்லி, ரேடியோ இணைக்கப்படாத காராக இருந்தாலும், ட்ரான்ஸிஸ்டரைத் தூக்கிக்கொண்டு போகிறார்கள். அதனால் பலன் இருக்கிறது, தீமை இல்லை என்பதை ஏற்றுக்கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு முடிவை இதிலிருந்து ஏற்படுத்திக்கொள்ள முடியாது. கனம் அங்கத்தினர் சொல்லுவதை நான் ஆட்சேபிக்கவில்லை. சில சமயங்களில் அனுகூலம்கூட இருக்கும் என்று தான் நான் எண்ணுகிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர் : வியாபாரிகள் வீட்டில் இருந்தால் ரேடியோவிலிருந்து உலக விவகாரங்களைத் தெரிந்துகொள்ள முடியும். ஆனால் அவர்களுக்கு சதா பிரயாணம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. அவர்கள் அப்படிப் பிரயாணம் செய்யும் போது நாட்டுச் செய்திகளைத் தெரிந்துகொள்ள பஸ்களில் ரேடியோவைப் பொருத்த அரசாங்கம் உத்திரவு இடுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வியாபாரிகள் தெரிந்துகொள்ளலாம். அது நலமாகவும் இருக்கலாம் அல்லது தீமையாகவும் இருக்கலாம். இப்போது கனம் சுதந்திரா கட்சித் தலைவர்கூறிய மாதிரி தூக்கம் வராமல் இருக்கவும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இசை தூக்கத்தையும் அளிக்கும். எப்படியும் பஸ்ஸில் வேண்டாமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். முருகையன் : இதுபோன்ற வானொலிப் பெட்டிகள் அமைச்சர் கார்களில் பொருத்தப்பட்டிருக்கின்றனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்த வரையில் இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

கனம் சபாநாயகர் : கொடுக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர் சொல்லுகிறார்களா ?

போலீஸ் அவுட் போஸ்ட் (மாத்தூர்).

* 232.கேள்வி—**திரு. இரா. நாராயணன் :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், மாத்தூரில் ஒரு அவுட் போலீஸ் நிலையம் ஏற்படுத்த உத்தேசமுண்டா ?